கலர் பிலிம் சுருள்கள்
கூடிய விரைவில் கழுவிக்
(Processing & Printing)
கொள்வதற்கு
ஞானம்ஸ்
ஸ்ரூடியோ
போஸ்ற்கார்ட் பிரதி ஒன்று
ரூ 5 75
நெகடிவ் ஆக்குவதற்கு
(Proccessing) இலவசம்!
301, Clock Tower Road,
JAFFNA. T'Phone: 23067

Registered as Newspaper

உதயன்

விலை ரூ.1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

யாழ். நகரில்
தரமான
போட்டோ ஸ்ரற்
பிரதிக்கு
ஞானம்ஸ்
ஸ்ரூடியோ
301, Clock Tower Road;
JAFFNA
T'Phone: 23067

கடிதம் 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆடி மீ 15 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1406 ஷவ்வால் பிறை 20 (29 06 1986) UTHAYAN. A DAILY TAMIL DAILY கிழமை 190

நேற்று முன் தினம் வெளிக்கிழமை பருத்தித்துறையில் நடந்த சிலுவை ஊர்வலத்தில் எடுக்கப்பட்ட படங்கள்.

முதலாவது படத்தில் பருத்தித்துறை பங்குத் தந்தை அருட் சகோதரர் பொலிபொஸ் அடிகளார் ஊர்வலத்தை ஆரம்பித்து வழி நடத்தி வருகிறார்.

இரண்டாவது படத்தில் ஊர்வலத்தில் சுமந்து வரப்பட்ட பெரிய சிலுவையைக் காணலாம் (இ-118)

கைது செய்தவர்களை மரத்துடன் கட்டி சுட்டுக் கொலை!

முச்சந்தி முரசி

பரந்தனில் அரச துருப்புகள் நேற்று நடத்திய அட்டகாசம்

— அலுவலகச் செய்தியாளர்; கே. ஆர். —

யாழ்ப்பாணம், ஜூன் 29

கிளிநொச்சி முகாமிலிருந்து வந்த ஆயுதப்படையினர் பரந்தனில் கோழிப் பண்ணை ஒன்றில் நின்ற எட்டுப் பேரைக் கைது செய்தனர். பின்னர் அவர்களை மரங்களில் கட்டி வைத்துவிட்டுச் சுட்டனர் என்று சொல்லப் படுகிறது.

நேற்றுப் பரந்தனில் தரைத் தாக்குதலும். வானத் தாக்குதலும் நடந்தன. பொம்மர் விமானங்களும் குண்டு வீசின. அவற்றின் விளைவாக மேலும் இருவர் கொல்லப்பட்டனர்

இதே வேளை பரந்தனில் வைத்து துருப்புக்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை நடைபெற்றது.

இச்சம்பவம் பற்றி அறியவருவதாவது:

நேற்றுக்காலை சுமார் ஒன்பது மணியளவில் கிளிநொச்சி இராணுவ முகாமில் இருந்து வெளியே வந்த நூற்றுக் கணக்கான சிப்பாய்கள் பரந்தன்வரை முன்னேறி வந்தனர். அவர்கள் நடைபவனியாகவும், வாகனங்களிலும் வந்தனர்.

வரும் வழி எங்கும் வாகனத்தில் இருந்து 'ஷெல்' தாக்குதல்களை மேற்கொண்டனர்.

பரந்தன் முல்லைத்தீவு வீதியில் உள்ள பாலம் ஒன்றும் அவர்களால் குண்டுவைத்து தகர்க்கப் பட்டதாக அறியவருகிறது

பரந்தனில் கோழிப் பண்ணை ஒன்றில் நின்ற எட்டுப்பேரைத் துருப்புகள் கைது செய்தனர். பின்னர் அவர்களை மரத்

(4ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் கட்சி: மற்றும் ஒருவரும் ராஜினாமா

கொழும்பு, ஜூன் 29

இலங்கை மக்கள் கட்சியில் இருந்து உதவிச்செயலாளர் திரு தென்னக்கூன் என்பவரும் ராஜினாமாச் செய்துவிட்டார்.

கட்சிச் செயலாளரான நடிகர் விஜயகுமாரணதுங்காவின் நடவடிக்கைகள் பிடிக்காமலே இவரும் விலகிவிட்டார்.

ஏற்கனவே கட்சித் தலைவர் பதவியில் இருந்த திரு ரி பி இலங்கரத்தினவும் உபதலைவர் பதவியில் இருந்து திரு டபிள்யு வி. குலரத்தினவும் விலகிவிட்டனர் என்பது தெரிந்ததே.

(எ-2)

சுதந்திரக்கட்சி சட்டநிபுணர்கள் பரிசீலிப்பர்

கொழும்பு, ஜூன் 29

இலங்கை அரசின் மாகாண சபை யோசனைகளை நுணுக்கமாகப் பரிசீலனை செய்ய சுதந்திரக் கட்சி சட்ட நிபுணர்கள் குழு ஒன்றை நியமித்துள்ளது.

கட்சிச் செயலாளர் திரு. சோமசார தலைமையில் இக்குழு இயங்கும். (எ-2)

லொறி வெறுமையாக கண்டு பிடிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 29

கடந்த 22 ஆம் திகதி புதுக்குடியிருப்புக்கு அடுத்துள்ள தேவிபுரத்தில் வைத்து கொள்ளை அடிக்கப்பட்ட லொறி 24 ஆம் திகதி புதுக்குடியிருப்புச் சந்திக்கு அருகில் கை விடப்பட்ட நிலையில் வெற்று லொறியாகக் கண்டுபிடிக்கப்பட்டது

இந்த லொறி யாழ்ப்பாணம் சுல்தான் ஸ் போக்குவரத்து நிறுவனத்துக்குச் சொந்தமானது ஆகும்.

இந்த கொள்ளையில் வந்த பொருள்களில் பெரும் பகுதி வெளிநாட்டில் வேலை செய்துவிட்டு வந்த 11 பேர்களின் உடைமைகளாகும்

அத்துடன் யாழ்ப்பா

(4ஆம் பக்கம் பார்க்க)

புது யோசனைகள் இந்திய அதிகாரிகள் கூட்டணியிடம் கருத்து

புதுடில்லி, ஜூன் 28

இலங்கை அரசு சமர்ப்பித்த யோசனைகளில் காணிக் குடியேற்றம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் இன்னும் இடைவெளிகள் இருக்கத்தான் செய்கின்றன.

இப்படி இந்திய அரசு வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

எனினும் புதிய யோசனைகளை அடிப்படையாக வைத்து, மேலும் பேச்சுக்களை நடத்தலாம் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு.

புதிய யோசனைகளைக் கையளித்த சமயத்தில் இந்திய அரசு அதிகாரிகள் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களிடம் இக் கருத்தை வெளிப்படுத்தினர்.

இலங்கை அரசு யோச

(4ஆம் பக்கம் பார்க்க)

குறித்து

இலங்கை அரசு யோசனைகள் பேச்சுக்களை நடத்த ஓர் அடிப்படை தான்.

இந்த யோசனைகளை நன்முக ஊன்றிப் படிக்க வேண்டும்.

இதை அடிப்படையாக வைத்துப் பேச்சுக்களைத் தொடரலாம்.

இந்தக் கருத்தை இந்திய அரசு அதிகாரிகள் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களிடம் தெரிவித்தனர்.

மாணவர்களின் பெற்றோர் அரச அதிபரிடம் கண்ணீரோடு முறையீடு

திருகோணமலை, ஜூன் 29

திருகோணமலைக் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 15 பாடசாலை மாணவர்களின் தாய்மார்கள் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் திருகோணமலை அரச அதிபரைச் சந்தித்து கண்ணீர் மல்க முறையிட்டனர்.

அப்பாவிகளான தங்கள் பிள்ளைகளை விடுவிக்க உதவும்படி அரச அதிபரை இவர்கள் கேட்டுக்கொண்டனர்.

அரச அதிபர் திரு. டி. எம். ஆரியரத்தின தாய்மாரிடம் சொன்னதாவது;

மாணவர்கள் பாதுகாப்பாக முகாமில் இருக்கின்றனர்.

அவர்கள் பாதுகாப்புக்கு நான் உத்தரவாதம் தருகின்றேன்.

3நாள் தவணை தாருங்கள் அதற்குள் இவர்களை விடுவிக்க முயற்சிக்கிறேன்.

3 நாளைக்குள் விடுவிக்காவிடின், அவர்களை விடுதலை செய்யும்படி மேலிடத்துக்கு விண்ணப்பிப்பேன்.

இப்படி அரச அதிபர் கூறினார்.

(இ-எ-150)

கூபநேரம்

29—6—1986

ஞாயிற்றுக்கிழமை

கூபநேரம்:-
8 56 முதல் 10 26 வரை

ராகுகாலம்:-
4 26 முதல் 5.56 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

அட்டமி நவ்மி
11.53 மணி

ஒருவர் பலி:

நாவற்குழியில் நேற்று 'ஹெலி' தாக்குதல்!

புலிகள் எதிர்த்துச் சமர்

வல்வெட்டி, ஜூன் 29

நாவற்குழியில் நேற்று ஹெலிக்கொப்டர் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார்.

இரண்டு பேர் காயமடைந்தனர்.

சம்பவம்பற்றி அறிய வருவதாவது:

நேற்று நண்பகல் 12 மணியளவில் சிப்பாய்கள் நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து வெளியேற முற்பட்டனர்.

மண் மூடைகளால் சிலர் அரண் அமைக்க மேலும் சிலர் நாவற்குழிச் சந்தியைநோக்கி பிரதான வீதியூடாக வர முற்பட்டனர்.

விடுதலைப்புலிகள் இவர்களது முன்னேற்றத்தை எதிர்த்து ஏ. பி- ஜி. போன்ற நவீன ரக ஆயுதங்களுடன் நேரடிமோதலில் ஈடுபட்டனர்.

சிப்பாய்கள் முன்னேற முடியாது இராணுவ முகாம் நோக்கிச் செல்ல நேரிட்டது.

சிப்பாய்கள் தரப்பில் ஏற்பட்ட சேதம்பற்றித் தெரியவில்லை

ஆனால் ஹெலிக்கொப்டர் ஒன்று இத்தாக்குதல் நடந்த சிறிதுநேரத்தில் இராணுவ முகாமில் இறங்கிச் சென்றது குறிப்பிடத்தக்கது.

இராணுவ முகாமை அடைந்த சிப்பாய்கள் ஷெல் தாக்குதலில் ஈடுபட்டனர். நண்பகல் 12-45 மணியளவில் பலாலி இராணுவ முகாமில் இருந்து வந்த ஹெலிக்கொப்டர் ஒன்றும் ஆகாயத்திலிருந்து தாக்குதலில் ஈடுபட்டது.

இத்தாக்குதல் பிற்பகல் 1-30 வரை நடைபெற்றது.

இதனால் பொதுமக்கள் மூவர் காயமடைந்தனர். அவர்களில் ஒருவர் ஆண் இவர் வைத்தியசாலையில் இறந்து விட்டார். இவர் துன்னாலையைச்சேர்ந்த வி. வி. தவராஜா. வயது 32 இவர் நாவற்குழி கட்டடப்பகுதியில் பாதுகாப்பு அதிகாரியாகக் கடமையாற்றினார்.

இவர் இருந்த வீடு நாவற்குழிச் சந்தியிலிருந்து100 மீற்றர் தூரத்தில் கண்டி ரோடில் உள்ளது.

இவர் வீட்டில் இருந்த போதே ஹெலிக்கொப்டரிலிருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்றினால் தாக்கப்பட்டு மரணமடைந்தார்.

இவர் இருந்த வீட்டின் முன்பாகம் சேதப்படுத்தப்பட்டுள்ளது. கண்

(4 ஆம் பக்கம் பார்க்க)

பருத்தித்துறையில் சிலுவை ஊர்வலம்

பருத்தித்துறை, ஜூன் 29

தோலைட்டி ஆரம்துறவி தொண்டைக் கண்டித்து பருத்தித்துறையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சிலுவை சுமக்கும் நீண்ட தூர அமைதிப் பிரார்த்தனை ஊர்வலம் நடைபெற்றது.

ஊர்வலம் பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்தில் பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு பொலிபொஸ் அடிகளாரால் மாலை 4 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஊர்வலத்தில் தோலைட்டி ஆரம்பத்தில் இராணுவத்தினரின் துப்பாக்கி வேட்டுக்குப் பலியான அருட் சகோதரர் வண இமானுவேல் வென்செஸ்லாஸ் அடிகளாரின் திருவுருவம் பொறிக்கப்பட்ட ஊர்தியும் பவனி வந்தது.

பருத்தித்துறைப் பகுதியிலுள்ள பெருந்திரளான மக்கள் மத வேறுபாடின்றி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

ஊர்வலம் பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆரம்பித்து பிரதான வீதி வழியாக, மாலி சந்தி, வதிரி, நெல்லியடி ஊடாக கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தைச் சென்றடைந்தது

நெல்லியடியிலிருந்து கரவெட்டி பங்குத்தந்தை அருட்திரு சகாயநாயகம் அடிகளார் சிலுவையைத் தாங்கி இறுதியில் கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் ஊர்வலத்தை முடித்து வைத்தார்

ஊர்வலம் சென்ற வீதி தோறும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

வீதி தோறும் தென்னோலை, வாழை, கமுகு, தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மாலை 3 00 மணியிலிருந்து பருத்தித்துறை, மந்திகை, நெல்லியடி ஆகிய பகுதிகளிலுள்ள கடைகள் அனைத்தும்

(4ஆம் பக்கம் பார்க்க)

தடைமுகாமில் வாகனங்கள் தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த தனியார் வாகனங்கள், பஸ்கள் ஆகியவறறு தடைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு நாட்களாக கொழும்பில் இருந்து வந்த வாகனங்களே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன.

எனினும் வாகனங்களில் வரும்பிரயாணிகள் இ. போ. ச. பஸ்கள் மூலம் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்கள் முகாமினுள்ளும். வீதியோரங்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இவைகள் அனைத்தும் இன்று விடுவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது (இ-10)

இ. காங்கிரஸ் 23 இடங்கள்

புதுடில்லி, ஜூன் 29

நேற்று 6 மாநிலங்களில் நடந்த 37 மாநிலசபை தேர்தல் முடிவுகளில் 23 இந்திரா காங்கிரஸுக்கு கிடைத்தன

இந்திரா காங்கிரஸுக்கு அடுத்தபடியாக லோக்தள் 4 இடங்களைக் கைப்பற்றியது

தமிழநாட்டில் அ. தி. மு. கழகத்துக்கு 5 இடங்களும் இந்திரா காங்கிரஸுக்கு 2 இடங்களும், தி. மு. கழகத்துக்கு 1 இடமும் கிடைத்தன.

ஜனதா வேட்பாளர் இராமசெழியன் தோல்வி அடைந்தார். (இ)

முல்லைத்தீவில் நடந்த மோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 29

முல்லைத்தீவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை படையினரை நோக்கி மோர்விகள் தாக்குதல் நடத்தினர்.

இதனால் படையினர் தரப்பில் சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரியவருகிறது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது;

முல்லைத்தீவில் இருந்து நேற்று முன்தினமிரவு 8 மணி அளவில் நூற்றுக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் மல்லியவளை, புதுக்குடியிருப்பு பகுதிகளை நோக்கி நடை பவனி செல்லத் தொடங்கினர்.

இவர்களை எதிர்த்து முல்லைத்தீவில் போராளிகள் வைக்கண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலின் போது பல படையினர் காயமடைந்திருக்கலாம் எனத் தெரிய வருகிறது.

ஹெலிக்கொப்டர் ஒன்றும் பிரயுக்தியில் ஷெல் தாக்குதல் நடத்தியதாத் தெரிவிக்கப்படுகிறது

இதனால் பல பொதுமக்கள் காயமடைந்தனர்,

சுமார் இரண்டு மணி நேரமாக நடைபெற்ற இத்தாக்குதல்களுக்கு ஈடு கொடுக்க முடியாத சிப்பாய்கள் மீண்டும் முல்லைத்தீவு முகாமுக்கு திரும்பியதாகக் கூறப்படுகிறது

இச்சம்பவங்களின் போது பல வீடுகளும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

கிரான், இளிநொச்சி தாக்குதல்களில் சிப்பாய்களுக்கு பலத்த சேதம்

புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம் ஜூன் 29

கிரானில் வெள்ளிக்கிழமையும், கிளிநொச்சியில் நேற்று சனிக்கிழமையும் நடந்த தாக்குதல்கள் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை வருமாறு:-

வெள்ளிக்கிழமை கிரானில் நடைபெற்ற முற்றுகையின் பின்பு கொமாண்டோ பொலீஸாரை ஏற்று தரப்பினர் சுற்றி வளைத்து தாக்கியதில் பலத்த சேதம் கொமாண்டோக்கள் தரப்பில் ஏற்பட்டது.

எமது தரப்பில் மேலும் மூவர் வீர மரணமெய்தினர் லெப்டினன்ட் மொட்டைகஜன், குமார், ரெஜான் இவர்களுக்கு எமது வீரவணக்கங்கள்.

நேற்று சனிக்கிழமை கிளிநொச்சி இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் கால் நடையாகவும், வாகனங்களிலும் வெளியே வர முயன்றபோது எமது தரப்பினர் பலத்த தாக்குதலை மேற்கொண்டனர்

இத்தாக்குதலின் போது ரெக்கட் லோஞ்சர் மூலம் தாக்கியதில் ஒரு கவச வாகனம் சேதமானது பொலீஸாரும், ஹெலியும் இவர்களுக்கு உதவியாக வந்தன.

எமது வீரர்களின் எதிர்த் தாக்குதலால் அவை பின்வாங்கின

அவ்வழியாக டிராக்டரில் வந்தவர்களில் 6 பேரை இராணுவம் சுட்டுக்கொன்றுள்ளது. அத்துடன் டிராக்டரும் எரிக்கப்பட்டது

இராணுவ தரப்பின் சேத விவரம் தெரியவில்லை. எமது தரப்பில் எதுவித முழிப்புகளும் ஏற்படவில்லை.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

பிரஜைகள் குழு கூட்டம் இல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 29

வழமையாக மாதத்தின் கடைசி ஞாயிறு நடைபெறும் யாழ் பிரஜைகள் குழு இணைப்புக் குழுக் கூட்டம் வரதியின் காரணமாக இன்று நடைபெறமாட்டாது.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண சபைகள்

ஆதரவு வழங்க சிறிமாநிபந்தனை

கொழும்பு, ஜூன் 29

நாட்டையும் சிங்கள மக்களையும் பலி கொடுக்காத எந்தத் தீர்வுக்கும் எம் ஆதரவு உண்டு.

இப்படி சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சொன்னார்.

தொழிட்ட கொடையில் நடந்த சுதந்திரக்கட்சிக் கூட்டத்தில் திருமதி பண்டாரநாயக்கா பேசினார்.

கூட்டம் பலத்த பொலீஸ் காவலின் மத்தியில் நடந்தது.

ஆரம்பத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேலும் சொன்னதாவது:

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி அக்வினோ பாணியில் கூட்டங்களை நடத்தி நாம் குழப்பத்தை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக திரு ஜெயவர்த்தனா கூறுகிறார்.

நாங்கள் வீதிக்கு வந்தால் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் கூறுகிறார்.

அப்படிக் கூறும் ஜனாதிபதி, ஏன் யாழ்ப்பாணம் போய் நிலைவரவாதிகளை எதிர்த்துப் போராட முடியாது என்று கேட்கிறோம்.

நாம் இன்னும் வீதி வன்முறைகளில் இறங்கவில்லை.

நாம் அப்படிச் செய்தால் எம்மை யாரும் தடுக்க முடியாது.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா சொன்னார். (உ-எ-2)

அமெரிக்காவில் அரசு அதிகாரிகளை லலித் சந்திப்பார்

கொழும்பு, ஜூன் 29

அமைச்சர் லலித் அத்துலத்முதலி அமெரிக்காவில் அரசு அதிகாரிகளையும் சந்திப்பார்.

இப்படி 'தினகர' சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டது.

'தினகர' இலங்கை மக்கள் கட்சியின் ஆதரவு நாளிதழ்.

அமெரிக்காவில் உள்ள சிங்கள அமைப்புக்களின் அழைப்பில் தான் அமைச்சர் லலித் அமெரிக்கா சென்றிருக்கிறார் எனினும் அமெரிக்க அரசு அதிகாரிகளையும் அவர் சந்திப்பார் என்று தெரிய வந்துள்ளது—

இப்படி 'தினகர' செய்தி மேலும் கூறியது.

அமைச்சர் லலித்தின் அமெரிக்க விஜயம், கொழும்பு அரசியல் வட்டாரங்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளதாக சுதந்திரக்கட்சி ஆதரவு சிங்கள நாளிதழான 'தினரஸ' செய்தி வெளியிட்டது. (உ-எ-2)

படிப்படியாக முன்னேறி இயக்குனரானவர் சங்கர்

தமிழ்த்திரையுலகில் பிரமிக்கத்தக்கசாதனைகள் பல புரிந்தவர் டைரக்டர் கே சங்கர் அவர் முப்பத்துமூன்று ஆண்டுகளாக படங்களை இயக்கிவருகிறார்.

அவர் தமது அனுபவம் பற்றிச் சொல்கிறார்:

நான் என்னுடைய பதினாறாவது வயதில் 1938இல் கோவை சென்ட்ரல் விடுடியோவில் உள்ள எடிட்டிங் பிரிவில் எடுபிடி ஆளாகச் சேர்ந்தேன்.

படிப்படியாக முன்னேறி டைரக்டர் ஆனேன். நான் இயக்கிய முதல்படம் "டாக்டர்" என்ற சிங்களப் படம்தான்.

இந்தியில் மட்டும் இருபது படங்களை இயக்கி இருக்கிறேன் பிரிதிவிராஜ் கபூர் ஷம்மி கபூர் வரை என்னிடம் நடித்திருக்கிறார்கள்.

வடதுருவம்—தென் துருவம் என்று சொல்லக்கூடிய எம்.ஜி ஆர் —சிவாஜியை வைத்தே ஒரே சமயத்தில் பல படங்களை இயக்கி இருக்கிறேன்.

இருவரும் மோதிக் கொண்ட காலத்திலேயே பகலில் ஆலயமணிப் படப் பிடிப்பு என்றால், இரவில் பணத்தோட்டம் படப்பிடிப்பு நடத்தி இருக்கிறேன்

பட அதிபர் ஏவிஎம் முருகன், இருவரும் என்னிடம் தவிடைரக்டர்களாகப் பணிபுரிந்திருக்கிறார்கள்.

ஆண்டவனைப்போய் அழகாகப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள் நாம் திருப்பதி ஏழுமலையானுக்கு 6 கோடி ரூபாவில் வைரக் கிரீடம் தயாரித்திருக்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

எனவே பிரமிப்பூட்டும்படி காட்சிகள் இருக்க வேண்டும் என்று நான் ஆசைப்படுவேன். செலவு அதிகமாகத்தான் செய்யும்" என்று கூறுகிறார் அவர்.

தினசரி தினமணி

முதலாவது சர்வகட்சி மாநாட்டில்

மாவட்ட சபைக்கு மேல் ஒன்றுமே இல்லை என்றவர் பிரதமர்

கருத்தரங்கில் பீட்டர் கெனமன்

கொழும்பு, ஜூன் 27

முதலாவது சர்வகட்சி மாநாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி மாகாண சபைத் திட்டத்தை முன் வைத்தபோது மாவட்ட சபைக்கு மேல் ஒன்றுமே கொடுக்க முடியாது என்று கூறியவர்தான் பிரதமர் பிரேமதாச.

இப்படிச் சொன்னார், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு பீட்டர் கெனமன்.

கல்வி பொருட்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 29

நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வர வித்தியாலயத்தில் நாளை திங்கட்கிழமை கல்விப் பொருட்காட்சி நடைபெறுகிறது.

காலை 11மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை பொருட்காட்சி நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். வட்டாரக் கல்வி அதிகாரி திரு இ சிவானந்தன் கலந்துகொள்கிறார். (இ

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை கல்விப் பொருட்காட்சி நாளை திங்கட்கிழமை காலை 9 மணியில் இருந்து பிற்பகல் 4 மணிவரை நடைபெறுகிறது.

யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

செவ்வாய்க்கிழமை காலை 9 மணியில் இருந்து நண்பகல் 12 30 மணி வரை நடைபெறும் பொருட்காட்சிக்கு யாழ் கல்வி அதிகாரி திரு. கு சோமசுந்தரம் பிரதம விருந்தின்ராகக் கலந்து கொள்வார்.

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியில் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்விப் பொருட்காட்சி ஆரம்பமாகிறது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு க. சிவநாதன் மூர்த்தி பொருட்காட்சியை ஆரம்பித்து வைத்தார். (இ-10)

கண்டியில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் திரு பீட்டர் கெனமன் பேசுகையிலேயே இதைச் சொன்னார்

பிரிந்து சென்று தனி நாடு அமைக்கக் கூடிய தான சுயநிர்ணய உரிமை தமிழருக்கு வழங்கப்படவேண்டும் என்பதை கம்யூனிஸ்ட் கட்சி ஒப்புக் கொள்கிறது

எந்த அதிகாரப்பரவலாக்கலும் ஒற்றையாட்சித் திட்டத்தின் கீழ் இருக்கக் கூடாது.

பிரிந்து சென்றும் சுய நிர்ணய உரிமை வழங்கப்பட்டாலும் தமிழர் அதனைப் பயன்படுத்தக் கூடாது அப்படிப் பயன்படுத்துவது ஏகாதிபத்திய - முதலாளித்துவ சக்திகளுக்கே உதவுவதாக இருக்கும்.

இனப் பிரச்சினைக்குத் தற்காலிகத் தீர்வையேனும் காணத் தடையாக இருக்கும் வடக்கு கிழக்கு இணைப்பைத் தமிழ்த் தலைவர்கள் கைவிட வேண்டும் - இப்படி திரு பீட்டர் கெனமன் சொன்னார் (இ - எ)

தீவுப்பகுதி

அலுவலகங்களில் அதிகாரிகளை காணமுடியாத நிலை

புங்குடுதீவு, ஜூன் 29

தீவுப்பகுதி அரச அலுவலகங்களில் அதிகாரிகளைக் காண முடியாமலிருப்பதாக பொது மக்கள் புகார் செய்கிறார்கள்.

தற்போதைய குழ்நிலையைப் பயன்படுத்தி உத்தியோகத்தர்கள் பலர் அலுவலகங்களுக்குச் சமுகமளிப்பதில்லை என்றும் இதனால் இவர்களைக் காண்பதற்குப் பல முறை மக்கள் அலையவேண்டியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இப்பகுதியில் இந்நிலை நீடித்தால் அரச அலுவலகங்களுக்குப் பொது மக்கள் செல்வதில் எவ்வித பயனுமே ஏற்படாதென கடுகிக் காட்டப்படுகிறது.

சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் இது விடயத்தில் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனப் பொது மக்கள் கோருகிறார்கள். (இ-131)

தீவுப்பகுதியில் கடமையாற்றும்;

வெளியூர் ஆசிரியருக்கு தங்குமிட வசதி

யாழ்ப்பாணம், ஜூன் 29

தீவுப்பகுதியில் கடமை ஆற்றும் வெளியூர் ஆசிரியர்கள் தங்குவதற்கு வேலணை சேர்வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலய விடுதியில் வசதி செய்து தரப்படும்.

பாதிக்கப்பட்ட ஆசிரியர் குழுவினர் யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளரைச் சந்தித்த போது இவ்வாறு இணக்கம் காணப்பட்டதாக இக்குழுவின் தலைவர் திரு. பொ. பாலச்சந்திரா உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தீவுப் பகுதிக்கு திங்கட்கிழமை காலை செல்வதற்கும் பின்னர் வெள்ளிக்கிழமை பிற்பகல் திரும்புவதற்கும் வடபிராந்திய போக்குவரத்து சபை பஸ் சேவையைக் கல்வித் திணைக்களம் ஒழுங்கு செய்து கொடுத்தல்.

விடுதியின் தங்கியிருக்கும் வெளியூர் ஆசிரியர்களுக்கு வசதியான பாடசாலைகளுக்கு வட்டார ரீதியான இடமாற்றம் செய்வது.

சேவை மூப்புக்கு முன்னுரிமை அளித்து நியாயமான முறையில் இடமாற்றங்களைச் செய்தல்.

திருமணமான பெண்களின் உடல் நிலையைக் கருத்திற்கொண்டு உரிய வசதிகளைச் செய்துதரல்

—இவ்வாறும் இச்சந்திப்பின் போது இணக்கம் காணப்பட்டதாக திரு. பொ. பாலச்சந்திரா உதயனுக்கு விளக்கிக் கூறினார். (இ-9)

மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

பரீட்சை முடிந்தபின் வந்த அனுமதி கார்ட் தமிழ் ஊழியர் படும் வேதனை

யாழ்ப்பாணம் ஜூன் 29

இம்மாதம் 14ஆம் திகதி நடைபெற்ற பரீட்சை ஒன்றுக்கு 18 ஆம் திகதி அனுமதி கார்ட் கிடைத்தது.

சிறுபணி செய்பவர்களை பொது எழுதுவினைஞர் சேவையின் (ii)ஆம் 'ஆ' பிரிக்கும், நட்டெழுத்தாளர் பிரிவு (ii)ஆம் 'ஆ' பிரிவுக்கும் நியமிப்பதற்கான பரீட்சையில் தோற்ற விண்ணப்பித்தோருக்கே இக்கதி ஏற்பட்டது.

இதுவரை யாழ்.மாவட்டத்தில் பணிபுரியும் ஊழியருக்கு யாழ்ப்பாணத்திலேயே பரீட்சை நிலையம் அமைக்கப்பட்டது.

இந்தமுறை அம்பாறை அனுராதபுரம் ஆகிய இடங்களிலேயேபரீட்சை நடத்தப்பட்டது.

தமிழ் ஊழியர்களைப் பழிவாங்கும் நடவடிக்கையாக இது அமைகிறது என்று அரசாங்க பொதுச்சேவைத்தொழிலாளர் சங்கம் பரீட்சை ஆணையாளருக்கு இவ்விடயம் பற்றி அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது மற்றும் ஒரு தினத்தில் இப்பரீட்சையை மீண்டும் நடத்தும்படி அது கோரியுள்ளது. (இ-5)

சேவை

மின் விசிறி, மின் அடுப்பு, ரான்ஸ்போமர், மோட்டர், பிறைன்டர், வாஷிங் மெஷின், ஸ்ரார்டர், றிப் சுவிச் ஆகியன உத்தரவாதத்துடன் திருத்த, றீவைண்டிங் செய்ய: ஓமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் பழுதடைந்த மேற்குறிப்பிட்ட உபகரணங்கள் விலைக்கும் வாங்கப்படும்.

விற்பனைக்கு

நல்ல இன ஒன்பது வாரம் சென்ற, பூச்சி அகற்றிய கறுப்பு, மண்ணிற அழகான அல்சேசன் (Alsation) பெண் குட்டிகள் விற்பனைக்குண்டு. அரியரெத்தினம், மாக்கெற் ரோட், (பேக்கரி முன்பாக)கொக்குவில் மேற்கு

காயமடைந்த பொலீஸார்

கொழும்பு, ஜூன் 29

திருகோணமலை நகரில் ஊர்காவல் படையினர் கூட்டதால் படுகாயங்களுக்காளான இரண்டு பொலீஸாரும் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஹரிச்சந்திரா, யபிதுங்க என்பவர்களே அப் பொலீஸார். (இ-எ-2)

நியமனம்

உடுவில் ஜூன் 29

யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபையின்சுன்னாகம் அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராக சுமார் ஆறு ஆண்டுகள் பதவி வகித்த திரு. இ இராமலிங்கம் உள்ளூராட்சி நிர்வாக சேவை தரம் இரண்டுக்கு பதவியுர்வு பெற்று வவுனியா நகர சபைக்கு செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். (இ-27)

கூட்டுறவு கடன் திட்டம் கைவிடப்பட்டது

பலாலி, ஜூன் 29

வடபகுதியின் கூட்டுறவுச் சங்கங்கள், விவசாயிகளுக்கு வழங்கவிருந்த கூட்டுறவுக் கடன் திட்டத்தைக் கைவிட்டுள்ளன.

முன்பு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயக் கடனைப் பெற்று அதனைத் திரும்பச் செலுத்தாத பலர் இக்கடன்களைப் பெறத் தகுதியற்றவர்களாக இருப்பதனாலும்.

இக்கடன் திட்டத்தில் அனேக மக்கள் அதிக கவனஞ் செலுத்தாது இருப்பதனாலும்.

கடன் வழங்குதல்—திருப்பி அறவிடல் போன்ற நடவடிக்கைகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மேலும் வேலைப் பழுவைக் கூட்டுவிக்கும் என்பதனாலும் இக்கடன் வழங்கும் திட்டம், கைவிடப்பட்டுள்ளது.

மக்கள் வங்கி மூலம் வழங்கப்படவிருந்த இக்கடன் திட்டத்திற்கு வடபகுதியில் உள்ள பல விவசாயிகள் தகுதியற்றவர்களாக இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது (இ-119)

உடுவில் குளத்தில் மண் வெட்டி எடுக்கப்படுவதை தடைசெய்க

அரச அதிபரிடம் கோரிக்கை

மானிப்பாய் ஜூன் 29

உடுவில் குளத்திலிருந்து களிமண் வெட்டி எடுக்கப்படுவதை தடுத்து நிறுத்துமாறு உடுவில் குளம் விவசாயிகள் நலன் புரிச்சங்க உபதலைவர் திரு க. கணேசரத்தினம் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரைக் கோரியுள்ளார்.

உடுவில்குளம் விவசாயிகள் நலன் புரிச்சங்கம், உடுவில்—சங்குவேலி மக்களுக்கு, உடுவில் விழிப்புக்குழு ஆகியன ஒன்று சேர்ந்து தமது கடும் ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளன.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர், உடுவில் உதவி அரச அதிபர், யாழ்ப்பாணம் கமநல சேவை உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் நீர்ப்பாசன பொறியியலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஆட்சேபனைக் கடிதத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

தினமும் பத்துக்குமேற்பட்ட லொறிகளில் களிமண் வெட்டி எடுத்துச் செல்லப்படுவதால் குளத்தில் கிரவல் கற்கள் தென்படுகின்றன.

இதனால் மழைக்காலத்தில் நீர் தேங்கி நிற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குளத்தின் நீர்மட்டம் குறையும்போது சேறு மட்டமும் குறையும் நிலை ஏற்படும்.

அண்மையில் நீர்ப்பாசன பொறியியலாளர் இக்குளத்தை பார்வையிட்டு, உலக வங்கி நிதி உதவியுடன் குளத்தைச் சீர் செய்வதும், அணைக்கட்டு,கதவுகள் அமைத்து வழக்கை ஆற்றுடன் இணைப்பதற்கும் ஆலோசிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இதனால் இக்குளத்தை அண்டியுள்ள வயல்நிலங்கள் சிறந்த நீர்ப்பாசனம் பெறும் வாய்ப்பு ஏற்படும்.

எனவே, விவசாயிகளின் நலன்கருதி மேற்படி குளத்திலிருந்து களிமண் வெட்டி எடுக்கப்படுவதை நிறுத்தி நீர்ப்பாசன பொறியியலாளரின் புனருத்தாரண வேலைகளை செயல்படுத்த உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இப்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-90)

மக்கள் முகம்

நிர்வாகிகள்

மட்டக்களப்பு, ஜூன் 29

அகில இலங்கை அஞ்சல்— தொலைதொடர்பு சேவைகள் சங்க மட்டக்களப்பு கிளையின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: வி. எஸ். இராசையா (காத்தான்குடி)

உப தலைவர்கள்; எஸ். தர்மராஜன் (செங்கலடி) திருமதி. பி. விக்னராசா (தொலைபேசிப்பரிவர்த்தனை) செயலாளர்: எஸ். சிவராசசிங்கம் (பெரியபோரதீவு) உதவிச் செயலாளர்: பி. கே. பசுபதி (மட்டக்களப்பு) (இ-எ)

நிவாரண உதவி

காங்கேசன்துறை, ஜூன் 29

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக ஊறணி, தையிட்டி, மயிலிட்டி கிராமிய ஒருங்கிணைப்பு சமாதானச் சபையால் சேர்க்கப்பட்ட பணத்தில் ஆயிரம் மீற்றர் வலை திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2000 ரூபா வழங்கப்பட்டது.

மேற்படி சபையினரால் யாழ் மாவட்டத்தில் உள்ள பல நிறுவனங்களிடம் இருந்தும் பிரமுகர்களிடம் இருந்தும் 17 ஆயிரம் ரூபா சேர்க்கப்பட்டது.

ஒரு மூடை அரிசி 300 சவர்க்காரம் ஆகியவையும் சேர்க்கப்பட்டன. (இ-68)

கலாசார மறுமலர்ச்சி முதலில் அவசியம்

முத்தமிழ் விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 29

இன்றைய சூழநிலையில் எமக்குத் தேவை முதலில் கலாசார மறுமலர்ச்சி பின்பே அரசியல் விடுதலை

இவ்வாறு பிரதம கல்வியதிகாரி கு. சோமசுந்தரம் கூறினார்.

யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற "முத்தமிழ் விழா" நிகழ்ச்சிகளின் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

விழாவுக்கு தலைமை வகித்த கல்லூரி அதிபர் திருமதி அ. ராஜரத்தினம் பேசுகையில்; "நாம் எமது பழமையை பேசிக் கொண்டிராமல், எமது தற்கால பிரச்சினைகளை, நிகழ்கால நிகழ்வுகளை எம்மை, கலாசார நிகழ்ச்சிகளில் பிரதிபலிக்க வேண்டும்" என்றார்.

விழாவில் கல்லூரி மாணவியரின் இயல், இசை, நாடகங்கள் நிகழ்சிகள் இடம் பெற்றன.

மாணவிகளின் பண்டாரவன்னியன் வரலாற்றுநாடகம் பலரின் பாராட்டைப் பெற்றது

விழா தொடர்பாக நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கான பரிசுகளை திருமதி தையல் நாயகி சோமசுந்தரம், கல்வி மூலவள நிலைய பொறுப்பதிகாரி எஸ். சி எஸ். சிதம்பரநாதன் ஆகியோர் வழங்கினர். (இ-5)

ரயில்வே தினக்கூலி பென்ஷன்

யாழ்ப்பாணம், ஜூன் 29

ஜூன் மாத பென்ஷன் பற்றுச் சீட்டுக் கிடைக்காத ரயில்வே பென்ஷன்காரர்கள் சிவில் ஒய்வூதியப் பற்றுச் சீட்டின் தன்மையை 'ரயில்வே பென்ஷன்' என்று மாற்றம் செய்து பாவிக்கும்படி யாழ் அரச அதிபர் கேட்டுள்ளார்.

இதை ஏற்றுக்கொள்ளும்படி வங்கி முகாமையாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

இப்படி யாழ் அரச அதிபர் அறிவித்துள்ளார். (இ-எ)

8ஆவது நினைவஞ்சலி

நல்லூர் செட்டித் தெருவைச் சேர்ந்தவரும் மானிப்பாயில் வசித்தவருமான

உயர்திரு
டாக்டர் சரவணமுத்து
சோமசுந்தரம்

பிறப்பு: 02-11-1912 மறைவு: 27-7-1978

வாழ்வாங்கு வாழ்ந்து எம்மை எல்லாம் வழி நடத்திச் சென்ற அன்புத் தெய்வமே! என்றும் தங்களின் நினைவு எம் நெஞ்சை விட்டகலாது.

இங்ஙனம்,
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

டாக்டர் C.C S. ராஜன்,
கிருஷ்ணா கிளினிக்,
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

Maternity & Nursing Home
CHANKANAI.

Applications are invited for the following posts:

1. MEDICAL OFFICER; M.B.B S.
2. TRAINEE DISPENSERS: Advance level and pass in English at Ordinary Level
3. TRAINFE NURSES: Qualifications same as above.
4. CASHIER: Cash security required
5. SECURITY GUARDS: Preference for Ex service men.

MEDICAL OFFICER IN CHARGE.

உதயன் விநியோகஸ்தர்கள் - வாசகர்கள் அங்காடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

மனம் தூயதாக இருக்கவேண்டும். மனம் தான் வாழ்க்கைக்கு இன்பம் தரக் கூடியது.
காஞ்சி முனிவர்

உதயன்

உண்மை – அநீதிக்கு அமைதி – நடு நிலைமை

இல, 15 2வது ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி 24805 22073
29-06-86 த. பெ. 23

சமாதானமும் சண்டையும்

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் மாகாண சபை யோசனைகளை முன் வைத்திருக்கிறது கடந்த புதன்கிழமை ஆரம்பமான அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மாநாட்டிலும் அவை சமர்ப்பிக்கப்பட்டு விட்டன.

அரசின் புதிய யோசனைகள் தமிழர்களால் ஏற்கக் கூடியவையா, இல்லையா? அவற்றின் நன்மை தீமை என்ன? இவை குறித்துக் கருத்து வெளியிடும் தருணம் இதுவல்ல அரசின் யோசனைகளை நன்றாக ஆராய்ந்த பின்னரே அவ்வாறு செய்ய முடியும். அதில் அவசரப்படுவது ஆகாது.

அரசியல் கட்சிகள் மாநாட்டைத் தொடர்ந்து அடுத்த நாள் – விய மூக்கிழமை, ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனா ஒரு பத்திரிகையாளர் மாநாட்டையும் நடத்தினார்.

அவ்வேளை அவர் தெரிவித்த கருத்துக்களில் முக்கியமான ஒன்றை இங்கு விரித்து,விவரித்து நோக்குவது இப்போதைக்குப் போதுமானது என்று கருதுகிறோம்.

அரசியல் கட்சிகள் மாநாட்டில் யுத்த நிறுத்தம் பற்றி ஆலோசிக்க வேண்டிய அவசியமில்லை என்றும் —

சண்டையை முடித்துக் கொண்டு நிட்டத்தை அமுல் செய்வதா அல்லது நிட்டத்தை அமுல் செய்த பின்னர் சண்டையை நிறுத்துவதா என்ற குழப்பநிலைக்கே இடமில்லை நாம் எமது நிட்டத்தை அமுல் செய்வோம். சண்டைக்கு வருபவர்களையும் எதிர்த்துப் போராடுவோம் என்றும் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

ஏற்கனவே அரசாங்கப் படைகளுக்கும், தமிழ்ப் போராளிகளுக்கும் இடையே நாட்டில் அடிக்கடி சண்டை நடைபெற்று வருகிறது.

அந்தச் சண்டை தமிழர்களின் உரிமைப் பிரச்சினையை அடித்தளமாகக் கொண்டது. அரசியல் கட்சி மாநாடும் அதனையே அடித்தளமாகக் கொண்டது

ஆகவே சண்டையை நிறுத்தி சமாதானப் பேச்சுக்களைத் தொடங்குவது தான் ஏற்புடையது. சமாதானத்தையும் சண்டையையும் ஒரே நேரத்தில் எப்படிச் செயலாக்க முடியும்? அதனால் ஏற்படக் கூடிய விளைவுகள் எவ்வாறு நற்பயன் தர முடியும்?

தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் அரசாங்கத்தின் இராணுவ அட்டூழியத்தால் அவர்கள் அல்லற்படுகிறார்கள். மரணத்தின் விளிம்பில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அதிலிருந்து முதலில் நிவாரணம் கிடைத்தால் தான் அவர்கள் மன அமைதி பெறமுடியும். மன அமைதி இருந்தால் மட்டுமே அவர்கள் அரசின் புதிய யோசனைகள் தமக்குச் சாதகமானவையா, பாதகமானவையா என்பதனைத் தீர்க்கமாக முடிவு செய்ய இயலும்.

சிங்கள மக்களும், அனேகமாக அதே சூழ்நிலையில் தான் வாழ்கிறார்கள். எந்த நேரத்தில் எந்த இடத்தில், குண்டு வெடித்துத் தங்கள் உயிர் போகுமோ என்ற அச்ச உணர்வுடன் வாழ்கிறார்கள்.

அவ்வாறு இருக்கும்போது அரசாங்கத்தின் யோசனைகளை ஆற அமர இருந்து பரிசீலனை செய்வது எங்ஙனம்?

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குக்கொண்டு வரப்பட்ட நிட்டத்தை சம்பந்தப்பட்ட இரு இன மக்களும் ஆராய முடியாத நிலையில் இருக்கும் போது, அவர்களின் கருத்தை, முடிவினை எதிர்பார்ப்பது பொருந்தாது. அரசியல்வாதிகள் மட்டுமே தனித்து முடிவு செய்யப்போகிறார்களா?

அவ்வாறாயின்—

புதிய யோசனைகள் குறித்து மக்கள் தமது கருத்துக்களை ஜனநாயக முறைகளில் தெரிவிக்கலாம் என்று அரசு கூறுவது வெறும் வேடிக்கையன்றி வேறென்ன?

சமாதானப் பேச்சுக்கள் நடத்துவதற்கு முன் சண்டை நிறுத்தப்படவேண்டும் அரசாங்கமே சமாதானப் பேச்சுக்களை முடுக்கிவிடுகிறது.

ஆகையால் சண்டையை நிறுத்தவேண்டிய முக்கிய பொறுப்பும் அரசாங்கத்திடம்தான் உண்டு.

தமிழ்ப் போராளிகள் சட்டரீதியான இயக்கத்தினர் அல்லர் என்று அரசாங்கமே கூறுகிறது எனவே அவர்களை முதலில் யுத்த நிறுத்தம் செய்யுங்கள் என்று அரசு கேடகமுடியாது.

ஆனால் அரசாங்கப்படைகள் சட்டபூர்வமானவை. அதனால் அவைதான் முதலில் யுத்தநிறுத்தம் செய்ய வேண்டும். அவர்கள் வடக்கு, கிழக்கைவிட்டு வெளியேறினால் சண்டை என்ற சொல்லுக்கே இடமிருக்காது யுத்த நிறுத்தம் அனாகவே அமுலுக்கு வந்துவிடும்

அமைதிச் சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடிய சக்தியும் அரசிடம் உண்டு அதனைப் பயன்படுத்தாமல், சண்டையை நடத்திக்கொண்டே சமாதானம் காண்பதென்பது பெரும் அறிவீனம் என்று நாம் கருதுகிறோம்.

ஆயின் புதிய யோசனைகளைச் சமர்ப்பித்துக் காணப்போவது என்ன?

சண்டையும் சமாதானமும் எப்படி ஒரே நேரத்தில் கைகூடமுடியும்? இந்தச் சிறிய தர்க்க சாஸ்திரம் அரசுக்கு விளங்கவில்லையா?

அகிம்சை பற்றியும், புத்தர் போதனைகள் பற்றியும், மகாத்மா போதனைகள் பற்றியும் பேசுவதால் மட்டும் சமாதானமும், தீர்வும் வந்துவிடா.

சண்டைசெய்துகொண்டே, பேச்சுவார்த்தை நடத்துவது என்று முடிவு செய்யப்படுமாயிருந்தால் இம்முறையும் ஆகப்போவது எதுவுமிலலை என்று அடித்துக்கூறலாம் அல்லவா? இதுவும் ஒரு காலம் கடத்தும் நாடகமோ!

தென் பகுதியில்

இந்தியாவின் விமானப்படை பலப்படுத்தப்படுகிறது

சென்னை, ஜூன் 28

தென்இந்தியப் பகுதிகளின் பாதுகாப்பு வசதிகள் அதிகரிக்கப்படுகின்றன அயல் நாடுகளிலிருந்து ஏறபடக்கூடிய எவ்விதமான தாக்குதலையும் முறியடிக்கும் நிலையில் இந்திய விமானப்படை தென் பிராந்தியத்தில் ஸ்திரப்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது

தமிழ்நாட்டில் மேலும் ஒரு விமானப்படைத் தளம் திருச்சி, மதுரை, சேரமாதேவி ஆகிய மூன்று இடங்களில் ஏதாவது ஒன்றில் அமையும்.

ஆந்திரா மாநிலத்தின் விஜயவாடாவிலும், விசாகப்பட்டணத்திலும் ஏற்கனவே விமானப் படைத்தளங்கள் அமைந்துள்ளன.

அந்தமான், திக்கோபார் தீவுகளில் விமானத் தளம் புதிதாக அமைய விருக்கின்றது.

திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள தெற்கு பிராந்தியத்தின் விமானப்படைத் தலைமை அலுவலகம் பலகோடி ரூபா செலவில் நவீனப் படுத்தப்பட வுள்ளது.

(இ ஒ)

இத்தாலிய பிரதமர் ராஜினாமா

ரோம் ஜூன் 28

மேற்கு ஜெர்மனியில் நடைபெற்ற ஐரோப்பிய பொருளாதார சமூக உச்சிமாநாட்டில் கலந்து கொண்ட பின்னர் இத்தாலி திரும்பிய பிரதமர் ஜோஜினா கிராக்ஸி, தமது கூட்டணி பிளவுபட்டதைத் தொடர்ந்து ராஜினாமாச் செய்தார்

இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர் கூடியகாலம் பதவி வகித்தது (மூன்றுவருட ஆட்சி) இவரது அரசுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-ஒ)

ராஜ்ய சபை தேர்தல்

புதுடில்லி,, ஜூன்.28

இந்திய ராஜ்யசபைக்கு 37 பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் வாக்குப் பதிவுகள் ஆறு மாநிலங்களில் நடைபெறுகின்றன.

உத்தர பிரதேசம் -12, பிகார் - 7, தமிழ்நாடு- 6, மகாராஷ்ரா- 6, ராஜஸ்தான்- 4, பஞ்சாப்- 2 என்ற அடிப்படையில் பிரதிநிதிகள் தெரிவு இடம் பெறும்.

இதற்காக 52பேர் போட்டியிடுகின்றனர்.

(இ-ஒ)

வேண்டுகோள்

ஹோய்க், ஜூன் 28

மேற்கு ஜெர்மனியில் நடந்த ஐரோப்பிய பொருளாதார சமூக அமைப்பின் 12 நாடுகளின் தலைவர்கள் கூட்டம் தென் ஆபிரிக்காவிற்கு எதிராக உடனடியாக பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என முடிவு செய்துள்ளது.

தென் ஆபிரிக்காவில் அனைத்து அரசியல் கைதிகளையும் உடனடியாக நிபந்தனையின்றி விடுவிக்குமாறும் கூட்டம் கேட்டுள்ளது. (இ-ஒ)

புதிய யோசனைகள் பேச்சை தொடரவே அடிப்படைகளாகும் ஜனதா எம். பி. கூறுகிறார்

சென்னை, ஜூன் 28

இலங்கை அரசின் புதியயோசனைகள் பேச்சுக்களைத் தொடருவதற்கான அடிப்படையாக இருக்குமே தவிர தீர்வாக இருக்க முடியாது

இப்படி இந்திய ஜனதாக் கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. எம் எஸ். குருபாதசுவாமி எம். பி. தெரிவித்தார்.

திரு குருபாதசுவாமி மேலும் சொன்னதாவது:

சமஷ்டி அரசமைப்பத் திட்டத்தின் கீழ் அதிகாரங்கள் பரவலாக்கல் செய்யப்படுவது பற்றி பரிசீலிக்கப்பட வேண்டும்.

பிரச்சினைக்குத் தீர்வு காணும் உண்மையான விருப்பம் இலங்கைக்கு இல்லை.

அரச பயங்கரவாதம் நிறுத்தப்பட வேண்டும். மத்திஸ்தர் என்ற பங்கைக் கைவிட்டு இந்தியா நேரடியாகவே இலங்கைப் பிரச்சினையைக் கையாள வேண்டும்.

இப்படி திரு. குருபாதசுவாமி சொன்னார்.

(இ-ஸ)

வெளி உலகில்

தீர்வு இல்லையேல் ஆகஸ்ட் 15க்குப் பின் நேரடி நடவடிக்கை

சுப்பிரமணியசுவாமி அறிவிப்பு

சென்னை, ஜூன் 28

பேச்சுவார்த்தை மூலம் இலங்கை இன பிரச்சினைக்கு தீர்வு காணத்தவறின் ஆகஸ்ட் 15 க்குப் பின்னர் நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவேன்.

இப்படி ஜனதாக் கட்சி தலைவர்களில் ஒருவரான டாக்டர் சுப்பிரமணிய சுவாமி அறிவித்திருக்கிறார்.

'துக்ளக்' வார சஞ்சிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி இத்தகவலைத் தெரிவித்தார்.

இலங்கையில் மனித உரிமைகள் பேணப்பட வேண்டும் என்ற விஷயத்தில் முன்னாள் இராணுவ அதிகாரிகள் அக்கறை காட்டுகின்றனர்.

பங்களாதேஷ் யுத்தத்தில் போரிட்ட இந்திய முன்னாள் இராணுவத் தளபதியான ஜெனரல் மனேக்ஷா கூட இலங்கையில் மனித உரிமை மீறல் குறித்து அக்கறை கொண்டிருக்கிறார்.

இப்படி 'துக்ளக்' பேட்டியில் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி சொன்னார். (உ-எ-2)

வெற்று பானைகளுடன் ஊர்வலம்

சென்னை, ஜூன் 28

சென்னை மேற்கு மாம்பல வாசிகள் குடிதண்ணீர் கோரி 'வெற்று மொன்றை வெற்றுப் பானைகளுடன் நடத்தினார்கள்.

இப்பகுதியில் கடந்த இரண்டு மாத காலமாக குடிதண்ணீர்விநியோகம் அனேகமாக நிறுத்தப்பட்டுவிட்டதே இதற்குக் காரணம்

ஊர்வலத்தில் சென்றோர் மகஜர் ஒன்றை அதிகாரிகளிடம் கொடுத்தனர். (இ-ஒ)

இன்று மெதடிஸ்த தினம்:

சபையின் 172 வருட தொடரும் பயணங்கள்

172 ஆண்டுகளுக்கு முன்பு இன்றைத்தினம் "கிறிஸ்துவின் நற்செய்தியோடு" காலித்துறை முனத்தில் பிரித்தானிய நாட்டு மிஷனறிகள் வந்து இறங்கினார்கள்.

"உலகமே எனது திருச்சபை" என்று கூறிய

ஜோன் உவெஸ்லியே மெதடிஸ்த திருச்சபையின் ஆரம்ப கர்த்தா ஆவார்.

திருச்சபை என்பது உயர்மட்டத்திலிருப்பவர்களுக்கு மட்டும் என்ற 'போலி'' எண்ணத்தை உள்ளத்திலே இருந்த தாகவும், ''சமுதாய மக்களையும், அவர்களது நிலைமையையும் புரிந்து அவர்களது மட்டத்தில் சென்று திருப்பணியாற்றுவது'' எனபதே

அவர் மெதடிஸ்தராக வரமுன்பு அவரி கடமையாற்றிய திருச்சபை அவரது உள்ளத்தின் தாகத்தை புரிந்து கொள்ளவில்லை அதன் விளைவே மெதடிஸ்த திருச்சபை உதயத்திற்குக் காரணமாக இருந்தது.

இந்த நற்நோக்கத்தின் அடிப்படையிலேயே யாழ்ப்பாணப்பகுதியில் குறிப்பாக பரி பேதுரு ஆலயம், விண்ணர் பண்ணை உவெஸ்லி ஆலயம், புதிதார் ஆர்க்கா ஆலயம், அச்செழு நல்லாயன் ஆலயம் ஆகியவற்றையும்— பருத்தித்துறை, கட்டைவேலி, நெல்லியடி, அல்வாய், கரிகோவள மெதடிஸ்த ஆலயங்களும் செயற்பட்டு வருகின்றன.

அடிமைப்பட்டு வாழும் இத்தனிச் உண்மை விடுதலை வாழ்வை புரிந்து கொண்டு செயலாற்ற திருச்சபை அதன் பணியில் தவறவில்லை என்று உறுதியாய் கூறமுடியும்.

1983 ஆம் ஆண்டு ஆடி கலவரத்தின் வேளையில் அகதிகளாக்கப்பட்ட தமிழர்களுக்கு மெதடிஸ்த திருச்சபை தன்னால் முடிந்த உதவியை அளித்ததுடன், தமிழர்களுக்காக மெதடிஸ்த திருச்சபையின் தலைவராக இருந்த வண. சோமா பேரேரா குரல் கொடுத்தார். தமிழர்களின் நிலையைக்கண்டு 'வாய்மூடி' மௌனமாக நிற்காது முதல்முதலாக தனது பணியைச் செய்ய மெதடிஸ்த சபை தவறவில்லை

இலங்கை நாட்டிலே! 172 ஆண்டுகள் மெதடிஸ்த திருச்சபை, சரித்திர தியாகங்கள், அனுபவங்கள், பணிமனி, தோல்விகள் எல்லாம் எதிர்காலத்தில் திருச்சபைக்கு கொடுபடப்போகும் உரமாகும்.

நான்கு சுவர்களுக்குள் இழுத்துப் பூட்டப்பட்ட திருச்சபையாக வாழாது மக்களோடு மக்களாக, ஏழைகளோடு ஏழைகளாக வாழ்ந்து அவர்களதுதேவைகள் வேண்டுதல்கள் மத்தியில்செயலாற்ற மெதடிஸ்த திருச்சபை வரப்போகும் 173 ஆவது ஆண்டை எதிர்நோக்குகின்றது

வரப்போகும் ஆண்டு, ஒரு செயலாற்றும் ஆண்டாக மிளிர கடவுள் தாமே எல்லாமக்களையும் வழிநடத்திக் காத்தருள் வாராக! (இ)

அருட்திரு.கே. டேவற்ஜெபநாயகம்

உடைத்து, ஏழைகள், அனாதைகள், அகதிகள், அடிமைப்பட்டவர்கள் மத்தியிலே திருச்சபை செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தை நிலை நாட்டி திருச்சபையை செயல்படுத்தினார் ஜோன் உவெஸ்லி அந்த செயல் பாட்டின் வெளிப்பாடே மெதடிஸ்த திருச்சபை.

இவரது பாத சுவட்டில் வளர்ந்து உலகமெங்கும் வியாபித்த மெதடிஸ்த திருச்சபை 1814 ஆம் ஆண்டு ஆனி 29 ஆம் திகதி எமது நாட்டிற்கும் தனது ஒப்பிலா பணியை ஆற்ற காலடி எடுத்து வைத்தது.

இந்த தினத்தை இன்று இலங்கையிலுள்ள மெதடிஸ்த சபையினர் மெதடிஸ்த தினமாக கொண்டாடுகிறார்கள்.

ஜோன் உவெஸ்லியின் சமாதானக் கொடியை ஏந்தி, கொடுமைகள், கொடூரங்கள், கொலைகள் வதிரக்கு எதிராக குரல் எழுப்பி வருகிறது.

இது மட்டுமல்லாது இலங்கையின் எல்லாப் பாகத்திலும் மெதடிஸ்த திருச்சபை தன் திருப்பணியில் ஒரு சாதனையை யேற்படுத்தி தொண்டாற்றி கிறது.

அன்று கல்வி சுகாதார சமூக பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட மெதடிஸ்த திருச்சபை இன்று விசேடமாக இலங்கை நாட்டின் இக்கட்டான வேளையில் தேடமனது—ன் அதிகிகள் கொடுமைகள், கொடூரங்கள், கொலைகளுக்கு எதிராக குரல் எழுப்பி வருகிறது.

ஞானக்கதிர்

மகாபாரதம்

குறள்:

எதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

பொருள்:

அயலாருடைய குற்றத்தைக் காண்பதுபோல் தம் குற்றத்தையும் காணவல்லவராகுல் நிலை பெற்ற உயிர்வாழ்க்கைக்குத் துன்பம் உண்டோ?

மாகாணசபை யோசனைகள்

நிராகரிக்கப்பட்ட நிலையிலே அடுத்து என்ன நடவடிக்கை? ஜனாதிபதியிடம் கேள்வி

இலங்கை அரசின் புதிய யோசனைகள் பற்றி ஜனாதிபதி ஜெயவர்த்தனா கடந்த வியாழன் மாலை வெளிநாட்டு உள் நாட்டுச்செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார். பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இம் மாநாடு நடந்தது அம் மாநாட்டின் ஒரு பகுதி இன்று பிரசுரமாகின்றது.

பி.பி.சி செய்தியாளர்:

புதிய யோசனைகளைப் போராளிகள் ஏற்கனவே நிராகரித்துவிட்டார்கள். வடக்கு – கிழக்கு இணைப்புக்கு நீங்கள் இணங்காததே அதற்குக் காரணம். இந்த நிலையில் நீங்கள் என்ன செய்ய உத்தேசித்துள்ளீர்கள்?

திரு ஜெயவர்த்தனா:

நல்லது நிராகரிக்கப்பட்டதுபற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. என்ன பதில் நீர் எங்கிடமிருந்து எதிர்பார்க்கிறீர்?

பி.பி.சி; போராளிகள் நிராகரித்த நிலையில் இராணுவ நடவடிக்கையைத் தொடர அரசாங்கமைப் பெற வேண்டும் என்று கருதுகிறீர்களா?

ஜே.ஆர்: நீர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

பி.பி.சி.: பிரிட்டன்.

ஜே.ஆர்: பிரிட்டனிடமிருந்து ஆயுதங்களைப் பெறுகின்றோம்.

பி.பி.சி: நல்ல ஆயுதங்களாகஅவை இருக்கும் என்று நம்புகின்றேன். பயிற்சி அளிக்கவும் நாம் ஆட்களைக் கொடுக்கின்றோம்

விஜிதாயாப்பா('தமிழ் ஈழம்', நாளிதழின் முன்னாள் ஆசிரியர்):

திருமலைத் துறைமுகம், மாகாண சபைக்குள் வரவில்லை இப்படி உலகில் வேறு நாடுகளில் நடைபெற்றதுண்டா?

ஜே.ஆர்: ஏன் இல்லை. துறைமுகம், விமானநிலையங்கள் பல நாடுகளில் மத்திய அரசின் கீழ்தான் கொண்டு வரப்பட்டுள்ளவே!

ஹரிசன் ராஜநாயகம் (தமிழ் ஈழம்):

புதிய யோசனைகளை சமஷ்டி அரசமைப்பிலான தீர்வு என்று கூறலாமா?

ஜே.ஆர்: இல்லை ஒற்றையாட்சித் திட்டத்தின் கீழ் சமஷ்டி முறையில் தீர்வு காணமுடியாது.

புதிய யோசனைகள்,அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தைமட்டுமே அடிப்படையாகக் கொண்டவை.

கேள்வி: வடக்கு—கிழக்குப் பகுதிகளில் இடம்பெறும் மாகாண சபைத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிடுமா?

ஜே.ஆர்: கிழக்கு மாகாண சபையில் நிச்சயமாக ஐ.தே.க. போட்டியிடும் கிழக்கு மாகாணத்தில் எமக்குச் செல்வாக்கு உள்ளது;

வடக்கு மாகாணத்தில் போட்டியிடுவது பற்றி அந்த நேரத்தில் தீர்மானிக்கப்படும்

வடக்கில் ஐ.தே.க. தனித்து போட்டியிடுவது அல்லது வேறுகட்சியுடன் கூட்டு வைத்துப்போட்டியிடுவதுபற்றி அச்சமயத்தில் தீர்மானிக்கப்படும்.

கேள்வி: மாகாணசபை யோசனைகள்பற்றி மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்ள சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுமா?

ஜே.ஆர்: இல்லை நிச்சயமாக நடத்தப்படமாட்டாது.

மக்களின் கருத்து மூன்று வழிகளில் அறியப்படலாம். சர்வஜனவாக்கெடுப்பு, நாடாளுமன்றம், பொதுத் தேர்தல் ஆகியவையே அவை.

வடக்கு — கிழக்கு இணைப்புப்பற்றி எல்லாச் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தலாம்.

மாகாண சபை யோசனைகள்பற்றி மக்கள் கருத்தை அறியச்சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது என்பது முடியாத காரியம்.

கேள்வி: தமிழ்ப் பகுதிகளில்உள்ளபெரும்தொழிற்சாலைகள், அந்தப் பகுதி மாகாண சபைகளின் கீழ்வருமா?

ஜே.ஆர்: இல்லை புதைபொருளாராய்ச்சித் துறை, கலாசாரத்துறையின் கீழ் நிச்சயமாக வரவேண்டும் என்று இல்லை. கலாசாரத் துறை சம்பந்தமான மாகாணசபை அதிகாரங்கள் சர்வகட்சி மாநாட்டில் வரையறுக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Courses Now In Progress
I.C.M.A - A & B
I.D.P.M. - I
I.A.B - All Stages
A.A.T. (Certificate)
A.A.T. (Pre im)
A.A.T. (Inter)
COMPUTER PROGRAMMING (Basic & Cobol)
Cantabia Institute
81 MAIN STREET, JAFFNA.
TPhone: 2420.

உதயன்
29 06 – 1986 ஞாயிற்றுக்கிழமை

RADIO & TELEVISION ENGINEERING COURSE
Week-end Classes - 6 Months
Commencement - 5-7-86 to 10 a.m.
Lecturer - Mr. E. Kanapathy Pillai
Fees - Rs. 250 per Month
Cantabia Institute
81 MAIN STREET, JAFFNA.
T'Phone 24201

அழிந்துபோக முன் காப்பாற்றுங்கள்

இந்தியப் பிரதமருக்கு கிளிநொச்சி அத்தியாவசிய சேவைகள் குழு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 29
இலங்கை இராணுவ நடவடிக்கையினால் நாம் அழிந்துபோவதற்கு முன் எம்மைக் காப்பாற்றுங்கள்.

இப்படி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு கிளிநொச்சி அத்தியாவசிய சேவைகள் குழு அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திற் உள்ள 142 பொதுநல அபிவிருத்தி நிலையங்கள் அத்தியாவசிய சேவைகள் குழு ஊடாக விடுத்துள்ள மேற்படி வேண்டுகோளின் பிரதிகள் ஜனாதிபதி, பிரதமர், இந்திய ஜனாதிபதி, கொழும்பு ஆலோசனைக் குழுத் தலைவர் ஜி. பார்த்தசாரதி, தமிழ் நாடு முதலமைச்சர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஜூன் 4 முதல் கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்று வரும் இராணுவத் தாக்குதல்கள், விமானத் தாக்குதல்கள் காரணமாக அப்பாவி மக்கள் செத்துக்கொண்டிருக்கிறார்கள்.

வீடு வாசல்களை இழந்தவர்கள் அகதி முகாம்களில் உணவு இன்றி மடிந்து போகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

நிலைமை மோசமாகிக் கொண்டு போகின்றது. அழிவில் இருந்து எம்மைக் காப்பாற்ற தாமதமின்றி தலையிட்டு இராணுவ நடவடிக்கையை நிறுத்த உதவுங்கள்.

இந்தியப் பிரதமர் மேற்கண்டவாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். (இ-எ)

ஷெல் தாக்கி ஒருவர் காயம்

ஊர்காவற்றுறை, ஜூன் 29
காரைநகர் கடற்படை முகாமிலிருந்து வியாழன் மாலை ஏவப்பட்ட ஷெல்லால் ஒருவர் படுகாயமுற்றார்.

தம்பாட்டி என்னும் கிராமத்தைச் சேர்ந்த இவர் தற்போது ஊர்காவற்றுறை வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அன்றையதினம் மாலை ஊர்காவற்றுறை, காரைநகர், நாரந்தனை ஆகிய பகுதிகள் உள்ளடக்கி விமானமொன்று ஆகாயத்தில் பல மணி நேரமாக பறந்து கொண்டிருந்தது.

அல்வேலையிலேயே காரைநகர் கடற்படை முகாமிலிருந்து 'ஷெல்' தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனால் அயற் கிராமங்களில் உள்ள சில வீடுகளின் கூரைகள், ஓடுகளும் உடைந்து நொருங்கின. (இ-16)

"கைக்கூலிகளுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை"

யாழ்ப்பாணம், ஜூன் 29
தமிழீழத்தில் இன மத பூசல்களை உருவாக்கும் கைக்கூலி அமைப்புக்கும் யாழ் முஸ்லிம் மக்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை

"சமூக விரோதிகளை இனங்காண்போம்; தண்டனை வழங்குவோம்" என்ற தலைப்பில் யாழ் முஸ்லிம் பொதுமக்கள் பெயரில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ் முஸ்லிம் வட்டாரத்தில் மூவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகவும், இதில் சம்பந்தப்பட்டவர்களை தமிழீழ விடுதலைப் புலிகள் கைது செய்தமை குறித்தும் இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது.

26-6 1986 திகதியிடப்பட்ட அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

சம்பந்தப்பட்டவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இதுசம்பந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நீர்ப்பை மக்கள் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தேடுதல் நடவடிக்கைகளோடு தொடர்ந்து இஸ்லாமிய இளைஞர் அமைப்பின் பலரிடம் இருந்து பயங்கர ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன

எதிர்காலத்தில் அவர்கள் செய்வதற்கு திட்டமிட்டிருந்த பல சதிநாச வேலைகளும் அம்பலத்துக்கு வந்துள்ளன.

இதுவரை பெறப்பட்ட ஆதாரங்களின்படி தேடுபடி இஸ்லாமிய இளைஞர் அமைப்புக்கும் அமெரிக்க ஒற்றர் ஸ்தாபனமான சி ஐ ஏ., மொஸாட், இலங்கை அரசு ஆகியவற்றுக்கும் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாகச் சந்தேகிக்கப்படுகின்றது.

யாழ் முஸ்லிம்களின் அபிப்பிராயப்படி கைக்குண்டு வீசியவன், வீசத் தூண்டியவன், உடந்தையாக இருந்தவன் அனைவரும் குற்றவாளிகளே.

இவ்வாறான காடைத்தனம் நிகழாதிருக்க சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் தண்டனையே ஒரு சரியான பாடமாக அமைய வேண்டும்.

26-6-86 இலங்கை வானொலியில் வெளியிடப்பட்ட செய்தியை நாங்கள் வன்மையாக மறுக்கிறோம். 3 கொலைகளுக்கும் காரணம் இஸ்லாமிய இளைஞர் அமைப்பே என்று தெரியப்படுத்துகின்றோம்.

இப்படி அந்த அறிக்கை கூறுகிறது. (இ-எ)

புது யோசனைகள்..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
னைகளை முதலில் நன்றாகப் படிக்க வேண்டியுள்ளது. அதன் பின்னர் இந்த யோசனைகள் பற்றிய எமது எண்ணம் என்ன என்பதை நாம் இந்திய அரசுக்குத் தெரியப்படுத்துவோம் —

இப்படி திரு அமிர்தலிங்கம் புதுடில்லியில் வைத்து செய்தியாளர்களிடம் சொன்னார்

கூட்டணிக் குழு, புதுடில்லியில் வைத்து திரு நி. பார்த்தசாரதி, வெளியுறவு அமைச்சர் திரு. சிவ்சங்கர், செயலாளர் [illegible] ஆகியோரை [illegible] (அ-எ-2)

நாவற்குழி..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
ஜன்னல்கள் யாவும் உடைந்து நொருங்கி உள்ளன

இவ்வீட்டில் பின்பகுதியிலிருந்த பனை ஒன்று ஷெல் தாக்குதலினால் பகுதி சிதைவடைந்து காணப்படுகிறது.

காயம் அடைந்த மற்றும் ஒருவர் நாவற்குழியைச் சேர்ந்த செல்வமணி திருமதி நீற்று சுப்பிரமணியம் வயது 43.

இவரது வீடு நாவற்குழிச் சந்தியிலிருந்து 150 மீற்றர் தூரத்தில் கேரதீவு ரோடில் உள்ளது இவரும் குசினியுள் சமைத்துக் கொண்டிருந்தார். இவருக்குக் கையில் காயம் மேற்பட்டது. (இ-74-10)

[illegible] து...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
தில் கட்டிவைத்துச் சுட்டுக்கொன்றதாகச் சொல்லப்படுகிறது.

இப் பகுதியில் பொம்மரி விமானங்களும் குண்டுத் தாக்குதலையும், ஹெலிக்கொப்டர்கள் ஷெல் தாக்குதல்களையும் நடத்தின.

அவற்றின் காரணமாக மேலும் இரண்டு பேர் பரந்தனில் கொலையுண்டனர்.

கடைகள் சேதம்

குண்டுவீச்சுக் காரணமாகப் பரந்தனில் உள்ள பல கடைகள் சேதமடைந்தன.

தந்திக் கம்பங்களும் மின்சாரக் கம்பங்களும் முறிந்து வீடுகளின் குறுக்கே விழுந்துள்ளன.

முன்னேறிக்கொண்ட துருப்புகளை நோக்கியும், விமானங்களை நோக்கியும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் கடும் தாக்குதல்களை நடத்தினர்.

படையினருக்கு ஏற்பட்ட சேதம்பற்றி விவரம் தெரியவில்லை

இச்சம்பவங்களை அடுத்து மக்கள் அச்சம் காரணமாக வீடுகளை விட்டு வெளியேறிவிட்டனர்.

இதனால் பஸ் சேவைகளும் வேறு பாதை மூடாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன: (அ-10)

லொறி...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
ணம் வர்த்தகர்களின் வியாபாரப் பொருள்களும் லொறியில் இருந்தன.

கொள்ளை போன பொருள்கள் இதுவரை மீட்கப்படவில்லை.

கொள்ளையின் பின்னணியில் யார் இயங்கினார்கள் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களை மீண்டும் உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு யாழ் கல்தான்ஸ் போக்குவரத்து நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ)

விளையாட்டரங்கு

15 வயதுப் பிரிவு

யாழ் இந்துக் கல்லூரி வெற்றியீட்டியது

— அலுவலக விளையாட்டுச் செய்தியாளர் —

யாழ்ப்பாணம், ஜூன் 29
யாழ் மாவட்டத்திற் உள்ள பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்றுவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் யாழ் இந்துக் கல்லூரி 15 வயதுப் பிரிவு அணி வெற்றியீட்டியது

15 வயதுப் பிரிவு அணி யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை முதல் இன்னிங்ஸால் தோற்கடித்தது.

15 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையேயான ஆட்டம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் அணி 124 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பி. முரளி சிறப்பாக ஆடி 46 ஓட்டங்களையும் கே. பிரசாந்தன் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

எஸ் வரதன் 5 விக்கெட்டுக்களையும் வி சுதமார், ரி. பிரபாகரன், பி துவாரகன், பாலபிரசாந்தன், எஸ் கே பிரதன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ்இந்து அணி ஆட்டநேர முடிவின்போது 8 விக்கெட்டுக்களை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அபாரமாக ஆடிய என். ஜெயராஜ் 57 ஓட்டங்களையும், வி பிரபாகரன், எஸ் பிரதாபன், பி பிரதீபன் ஆகியோர் முறையே 27, 26 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பாலன்சிவகிரிடம் 4 விக்கெட்டுக்களையும், ரி சதீசன் பி. முரளி ஜெயந்திரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (இ-7)

பருத்தித்துறையில்.....

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
கடையடைப்புச் செய்து துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது

பருத்தித்துறை பங்குத் தந்தை அருட் திரு. பொனிபொஸ் அடிகளார் ஊர்வலத்தை ஆரம்பித்து வைத்த போது கூறியதாவது:- "இயேசு கிறிஸ்து நாதரை சிலுவையில் அறைந்து கொடுமைப்படுத்தினர். ஆனால் அவர் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து மக்களின் மீட்சிக்கு வழி வகுத்தார்.

அருட் சகோதரர் வண. இமானுவேல் வென்செஸ்லாஸ் அடிகளாருக்குப் பாடைக்கு வேட்டுக்குப் பதிலாகிலும் அவர் மறைந்துவிட்டதாக நாம் கருதவேண்டியதில்லை. இதுபோன்ற கொடுமைகள் எமது வெற்றிக்கும் விடுதலைக்கும் நிச்சயம் வழி வகுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மனித உயிர்கள் மதிக்கப்பட வேண்டும். அப்போது தான் நாட்டில் அமைதியும், சமாதானமும் நிலைபெற முடியும்.

இன்று மனித உயிர்களுக்கு உரிய மதிப்பளிக்கப்படாமை மிகக் கவலைக்குரிய விடயமாகும்.

உலக மக்கள் அனைவரையும் அட்டூழியங்கள், அடக்குமுறைகளில் இருந்து காப்பாற்ற ஆண்டவனைப் பிரார்த்திக்க வேண்டியது மிக முக்கியமாகும் "

இப்படி அவர் கூறினார்.

பருத்தித்துறை பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் உரையாற்றுகையில் "தமிழினம் இன்று படும் இன்னல்களிலிருந்து மீட்சி பெற ஆண்டவன் தான் எம்மைக் காப்பாற்ற வேண்டும் இதற்கு ஒரேவழி அனைவரும் ஆன்மீக வழியாடுகளைப் பின்பற்றுதலேயாகும்" என்றார். (இ-118)

சாம்பல்தீவில் இறந்த ஐவர்

திருகோணமலை, ஜூன் 29
சாம்பல்தீவுக் கிராமத்திற் கடந்த வியாழக்கிழமை மாலை இடம் பெற்ற சிப்பாய்களின் துப்பாக்கிப் பிரயோகத்தில் இறந்த ஐவரில் இரண்டு பேர் 50 வயதுக்கு மேற்பட்டவர்கள்

அவர்களின் பெயர்கள் வருமாறு;

1. ராசலிங்கம், வயது 51
2. சபா, வயது 55
3. செல்வம், வயது 25
4. அல்பர்ட் லப்பன் வயது 40

நாவலரும் ஒரு வளவினுள் வைத்துச் சுடப்பட்டனர்.

5. கனகசபாபதி சபாநாயகம் வயது 45

(இ - எ - 150)

"பயணங்கள் தொடர்கின்றன" படவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 29
இன்று 'பயணங்கள் தொடர்கின்றன' வீடியோ திரைப்பட விழாவும் கலைஞர்களின் அறிமுக நிழ்ச்சியும் நடைபெற உள்ளன.

இதனை ஜீவா நாவுக்கரசின் 'ஆனந்தாலயம்' படநிறுவனம் தயாரித்துள்ளது.

இன்று காலை 10-00 மணிக்கு மேடபெயர் மினி தியேட்டரில் நடைபெறும் இவ்விழாவை வைதிகி கலாநிதி சி. எஸ் நச்சினார்க்கினியன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார். (இ-5)

முகமாலைத்தீவில்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
சேதமடைந்தன,

சிப்பாய்களின் தாக்குதலினால் காயமடைந்த ஜோசப் மரியநாயகம் (18 வயது) யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவருக்குக் காலில் காயம் ஏற்பட்டது. (இ-10)

இந்தியப் பிரதமருக்கு கிளிநொச்சி அத்தியாவசிய சேவைகள் குழு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 29
இலங்கை இராணுவ நடவடிக்கையினால் நாம் அழிந்துபோவதற்கு முன் எம்மைக் காப்பாற்றுங்கள்.

இப்படி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு கிளிநொச்சி அத்தியாவசிய சேவைகள் குழு அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திற் உள்ள 142 பொதுநல அபிவிருத்தி நிலையங்கள் அத்தியாவசிய சேவைகள் குழு ஊடாக விடுத்துள்ள மேற்படி வேண்டுகோளின் பிரதிகள் ஜனாதிபதி, பிரதமர், இந்திய ஜனாதிபதி, கொழும்பு ஆலோசனைக் குழுத் தலைவர் ஜி. பார்த்தசாரதி, தமிழ் நாடு முதலமைச்சர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஜூன் 4 முதல் கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்று வரும் இராணுவத் தாக்குதல்கள், விமானத் தாக்குதல்கள் காரணமாக அப்பாவி மக்கள் செத்துக்கொண்டிருக்கிறார்கள்.

வீடு வாசல்களை இழந்தவர்கள் அகதி முகாம்களில் உணவு இன்றி மடிந்து போகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

நிலைமை மோசமாகிக் கொண்டு போகின்றது. அழிவில் இருந்து எம்மைக் காப்பாற்ற தாமதமின்றி தலையிட்டு இராணுவ நடவடிக்கையை நிறுத்த உதவுங்கள்.

இந்தியப் பிரதமர் மேற்கண்டவாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். (இ-எ)

கல்விப் பொருட்காட்சி

பருத்தித்துறை, ஜூன் 29
பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் கல்விப் பொருட்காட்சி நாளை திங்கட்கிழமை வித்தியாலய அதிபரும், புலோலி கொற்றதணி அதிபருமான திரு. எஸ் ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெறும்.

இப்பொருட்காட்சியை யாழ். கல்வித் திணைக்களவிஞ்ஞான வட்டாரக் கல்வி அதிகாரி திரு எஸ் செல்லத்துரை திறந்து வைப்பார். (இ-118)

*

யாழ்ப்பாணம், ஜூன் 29
இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலய கல்வி அபிவிருத்திக் கண்காட்சி நாளை திங்கள், மறுநாள் செவ்வாய்க்கிழமைகளில் நடைபெறுகிறது.

நாளை பிற்பகல் 1-30 மணியில் இருந்து மாலை 5 மணிவரை கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

கல்வி அபிவிருத்திக் கண்காட்சியில் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (இ)

ஐவ்பர் மரணம்: தீர்ப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29
சேகு மதார் முகைதீன் ஜெவ்பரின் மரண விசாரணை முடிவில்தீர்ப்பு வழங்குவதை யாழ் பதில் நீதிவான் திரு கனகரத்தினம் கேசவன் ஒத்திவைத்தார்.

"சம்பவதினம் பிற்பகல் 1. 30 மணியளவில் நான் வீட்டில் இருந்தேன். அப்போது வெடிச்சத்தம் கேட்டது வெளியே வந்து பார்த்தேன்.

50 யார் தொலைவில் இருவர் தாங்கிப் பிடிக்க எனது மகன் வந்து கொண்டிருந்தார். தலையில் இரத்தக் காயத்துடன் எனது மகன் காணப்பட்டார்.

காரில் எனது மகனைக் கொண்டு சென்று ஆஸ்பத்திரியில் அனுமதித்தேன். பின்னர் யாழ் ஆஸ்பத்திரியில் அவர் காலமானார்.

—இவ்வாறு இறந்தவரின் தகப்பனார் சேகு மதார் சுல்தான் மரண விசாரணையில் காட்சியம் அளித்தார்.

வெடிகுண்டு வெடித்தமையால் மண்டை ஓட்டிலும் மூளையிலும் ஏற்பட்ட காயங்களின் இரத்தப் பெருக்கினாலும் அதிர்ச்சியினாலும் மரணம் ஏற்பட்டது

—இவ்வாறு பிரேத பரிசோதனை நடத்திய டாக்டர் கே சரவணபவானந்தன் தனது சாட்சியத்தில் கூறினார்.

இக்கட்டத்தில் திரு. க. கேசவன் தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார். (இ-9)

யாழ். கிறிஸ்தவர்களே!
ஆண்டவரின் அனுக்கிரக நாளாகிய
ஜூலை 19ஆம் திகதி
ஆபத்தமாகுங்கள்.
-- ஜெப சேவை --

ஓர் முக்கிய அறிவித்தல்
தோலகட்டி தயாரிப்புகள் நகரில் தாராளமாக கிடைக்கின்றது. தட்டுப்பாடோ அல்லது கட்டுப்பாடோ கிடையாது. எது எப்படியானாலும் எமது தயாரிப்புகள் தொடர்ந்து கிடைக்கும். போலிகள்! கவனம். எமது நெல்லிரச லேபலில் ஒரு மணிக்கூட்டு கோபுரம் உண்டு. அதில் நேரம் 6 20 மணியைக் காட்டுகின்றது. ஆகவே உன்னிப்பாக கவனித்து வாங்கவும், இவ் இளவேனிற் காலத்தில் தோலகட்டி நெல்லிரசம் உங்கள் தாகத்தை நிச்சயம் பூர்த்தி செய்யும்
எப் பிரதிநிதிகள்
ஜோ. எகஸ்டன் செபமாலைதாசா சபை
செனித் மார்க்கட்டிங் தோலகட்டி
யாழ்நகர். வலாகிளான்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற
வரணி மிசன்
விற்பனை நிலையம்
145, நவீன சந்தை: யாழ்நகர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 29 – 06—1986.
Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15, Second Lane, Power House Road, JAFFNA.
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under number O J 60 N 86

ROCK Engineers & Contractors
Water Supply & Building Works.

TUBE WELL'S
WATER IS PURE, FRESH, HEALTHY & SAFETY.
குழாய்க் கிணறுகளை நவீன இயந்திரங்கள் மூலம் அமையுங்கள்!
நாட்டை வளம்படுத்துங்கள்!
ரெக் எஞ்ஜினியர்ஸ் பருத்தித்துறை வீதி, கோப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org